## 28.10 உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகள்–மீன்வளத் துறை பற்றிய பரிந்துரைகள் மீதான அரசின் முடிவுகள்

கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் (மீன்–5) துறை

அரசாணை (நிலை) எண்.137 நாள் : 23.06.1999

படிக்க :

1. அரசாணை (நிலை) எண்.238, கால்நடைபராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை நாள்.16.11.97
2. ஊரக வளர்ச்சித் துறை செயலர் நேமுக எண்.14532/சி4/99/ நாள்.11.05.99.

**ஆணை**

இந்திய அரசியலமைப்பின் 73–வது திருத்தச் சட்டத்திற்கு இணங்க உருவாக்கப்பட்ட மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளான ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு தேர்தல்கள் நடைபெற்று தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பதவியேற்றுள்ளனர். மேற்கூறிய சட்டத்தின் பிரிவுகள் 243 ஜி–மற்றும் 1994–ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவு 257–க்கு இணங்க, பொருளாதார மேம்பாடு மற்றும் சமூக நீதிக்கான திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தவும் மற்றும் 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பட்டியல் 4–ல் உள்ள இனங்களை செயல்படுத்தவும், தேவையான பொறுப்புக்களை மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு வழங்க வேண்டும். அதன்படி முதல் கட்டமாக மாநில திட்டக்குழு இரண்டாவது அறிக்கையில் உள்ள பரிந்துரைகளின் அடிப்படையில் மீன்வளத்துறை தொடர்பான இனங்கள் மீது திட்டப்பணிகளைச் செயல்படுத்துவதிலும், கண்காணிப்பதிலும் ஊராட்சி அமைப்புகளுக்கு உரிய பொறுப்புகளை ஒப்படைக்க முடிவு செய்து அதன்படி பொறுப்புக்களை உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒப்படைப்பு செய்து பார்வை ஒன்றில் படிக்கப்பட்டுள்ள அரசாணையில் ஆணை வழங்கப்பட்டது.

2. மேற்படி ஆணையினைத் தொடர்ந்து இரண்டாவது கட்டமாக மூன்றடுக்கு ஊராட்சிகளுக்குக் கூடுதல் அதிகாரங்கள், உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் வழங்கி அரசுக்குப் பரிந்துரை செய்ய உயர்நிலைக்குழு (HIGH LEVEL COMMITTEE) அமைக்கப்பட்டது. அக்குழு தனது அறிக்கையை அரசுக்கு 11.1.1999–அன்று சமர்ப்பித்தது. (பக்கம் 3–6) குழுவின் அறிக்கை இயல் III–5–மீன்வளம் என்ற தலைப்பில் உள்ள பரிந்துரைகளை அரசு ஏற்று, அதன்படி இவ்வாணையின் பிற்சேர்க்கையில் மீன்வளத்துறை தொடர்பாக கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு கூடுதல்அதிகாரங்களை உரிமைகள் மற்றும் பொறுப்புகள் வழங்கி ஆணையிடப்படுகிறது.

3. கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு மீன்வளத்துறை தொடர்பான பணிகளை நிறைவேற்ற உரிய அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொள்ள தக்க அறிவுரை வழங்குமாறு மீன்துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின்ஆணைப்படி)

**மோகன் வர்கீஸ் சுங்கத்**
அரசு செயலாளர்

**பிற்சேர்க்கை**

**(அரசாணை (நிலை) எண்.137 கா.ப.ம.மீன்வளத்துறை (மீன்.5) நாள்.23.06.1999)**

**1. வளர்ச்சிப் பிரிவில் வழங்கப்படும் பொறுப்புகள் :**

**கிராம ஊராட்சிகள்**

புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்படும் மீனவ குடும்பங்களில் இழப்பு / சேதம் குறித்து மதிப்பீடு செய்வதில் மீன்துறைக்கு கிராம ஊராட்சிகளில் ஒத்துழைத்தல் மற்றும் மீனவர் காப்புறுதி திட்டத்தை மீனவர்களிடம் விளம்பரப்படுத்தி திட்டத்தில் ஊக்குவித்தல்.

**ஊராட்சி ஒன்றியங்கள்**

01. ஒட்டு மொத்த மீன்வள மேம்பாட்டு திட்டம் மற்றும் மீனவர் நலன் நாடும் நலத் திட்டங்களைத் தயாரிக்கும் பொழுது சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களை கலந்தாலோசித்து துறை அலுவலர்கள் செயல்படலாம்.

02. ஊராட்சி ஒன்றியத் தலைவர், தொடர்புடைய ஊராட்சியில் கடல் மற்றும் உவர் நீர் மீன் வளர்ப்புக்குரிய பகுதிகளை தேர்ந்தெடுக்க தகுந்த உதவிகள் செய்யலாம். மீன் வள கூட்டுறவு சங்கங்கள் அமைத்தல் மற்றும் மீன் இறங்கும் தளங்கள், புயல் பாதுகாப்பகம், மீன் உலர்த்தும் தளம் மற்றும் வழிகாட்டி விளக்குகள் அமைத்தல் ஆகியவை குறித்து ஊராட்சி ஒன்றியங்களின் உதவியை நாடுமாறு மீன்வளத்துறை அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்படலாம்.

03. மீன் குளிர்ப் பதனப்படுத்துதல், பதப்படுத்துதல், சிப்பம் கட்டுதல், பாதுகாத்தல் ஆகியவற்றில் மீன்வளத்துறை மூலம் மீனவர்களுக்கு பயிற்சியளிக்க வசதி செய்தல்.

04. ஊராட்சி ஒன்றியக்குழுவின் சீராய்வு கூட்டத்தில் மீன்துறை உதவி இயக்குநர் அல்லது மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை அலுவலர், உவர் நீர் மீன்வளர்ப்போர் முகமை அலுவலர், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக அலுவலர் (ஊராட்சி ஒன்றிய பகுதிக்குள்) ஆகிய அலுவலர்களில் எவரேனும் ஒருவர் கலந்து கொள்ளலாம்.

**மாவட்ட ஊராட்சிகள்**

ஒட்டுமொத்த மீன்வள மேம்பாட்டு திட்டங்கள் மற்றும் மீனவர் நல திட்டங்களை தயாரிக்க மாவட்ட ஊராட்சிகள் மீன் வளத்துறைக்கு தகுந்த உதவிகள் செய்யலாம்.

## 2 . மாவட்ட ஊராட்சிகளின் ஆய்வு, கண்காணிப்புமற்றும் ஆலோசனை மூலம் வழங்கப்படும் கூடுதல் பொறுப்புகள்.

01. மீன் வளர்ப்போர் மேம்பாட்டு அமைப்பு மூலம் உள்நாட்டு மீன் உற்பத்தியை மேம்படுத்துதல் திட்டம் பற்றி மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை பொறுப்பு வகிக்கும் மீன்துறை உதவி இயக்குநருடன் ஆய்வு மற்றும் மேற்பார்வையிடலாம்.

02. உள்நாட்டு நீர் நிலைகளில் மீன் வளத்தை பெருக்குதல் மற்றும் விற்பனை திட்டம் பற்றி இத்திட்டம் செயல்படுத்தப்படும் மூன்று மாவட்டங்களைஒய அமைத்தல் திட்டம் பற்றி சம்பந்தப்பட்ட உள்நாட்டு மீன்துறை உதவி இயக்குநர்களுடன் ஆய்வு செய்யலாம்.

04. செயற்கை முறை இறால் மீன் வளர்ப்பு மையங்களை நிறுவுதல் திட்டம் பற்றி சம்பந்தப்பட்ட மீன்துறை உதவி இயக்குநர்களுடன் ஆய்வு செய்யலாம்.

05. உவர் நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகவர் அமைப்புகளை நிறுவுதல் பற்றி சம்பந்தப்பட்ட மீன்துறை உதவி இயக்குநர்களுடன் ஆய்வு செய்யலாம்.

06. கடலோரப் பகுதிகளில் மீனை இறக்கும் பணிகளை மேம்படுத்துதல் பற்றி சம்பந்தப்பட்ட கடலோார மீன்துறை உதவி இயக்குநர்களுடன் ஆய்வு செய்யலாம்.

07. நவீன மீன்பிடி தொழில் நுட்பத்தில் மீனவர்களுக்கு பயிற்சி அளித்தல் மற்றும் மீனவர்களுக்கு பயிற்சி கால உதவி தொகை வழங்குதல் பற்றி சம்பந்தப்பட்ட மீன் துறை உதவி இயக்குநர்களுடன் ஆய்வு செய்யலாம்.

08. சுத்தமான கொள்கலன்கள் மற்றும் மூன்று சக்கர வண்டிகள் ஆகியவற்றை வழங்குவதற்காக மீனவர்களுக்கு நிதி உதவி திட்டம் பற்றி சம்பந்தப்பட்ட மீன்துறை உதவி இயக்குநர்களுடன் ஆய்வு செய்யலாம்.

09. மீனவர்களின் கட்டு மரங்களுக்கு இரசாயனப் பூச்சு பூசுதல் பற்றி சம்பந்தப்பட்ட கடலோர மீன்துறை உதவி இயக்குநர்களுடன்ஆய்வு செய்யலாம்.

10.கடல் அரிப்பு தடுப்பு திட்டங்களுக்காக நிதி உதவி திட்டம் பற்றி சம்பந்தப்பட்ட கடலோர மீன்துறை உதவி இயக்குநர்களுடன் ஆய்வு செய்யலாம்.

11. மீனவர் தொகுதி காப்புறுதி திட்டம் பற்றி சம்பந்தப்பட்ட பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் மற்றும் கடலோர மீன்துறை உதவி இயக்குநர்களுடன் ஆய்வுசெய்யலாம்.

12.மீனவர் சேமிப்பு நிவாரண திட்டம் பற்றி சம்பந்தப்பட்ட கடலோர மீன்துறை உதவி இயக்குநர்களுடன் ஆய்வு செய்யலாம்.

13.மீன்பிடி துறைமுகங்களை மேம்படுத்தும் பொருட்டு நிலங்களை கையகப்படுத்துவதற்காக நிதியுதவி திட்டம் பற்றி சம்பந்தப்பட்ட மீன்துறை உதவிஇயக்குநர் மற்றும் மீன்பிடி துறைமுக செயற்பொறியாளர்களுக்கு ஆலோசனை வழங்கலாம்.

**மோகன்வர்கீஸ் சுங்கத்**
அரசு செயலாளர்